International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20•4 October•December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

பத்துப்பாட்டில் துறைமுகங்களும் கடல்சார் வாணிகமும்

பா. பூமாரி
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

ஆய்வுச் சுருக்கம்

பழந்தமிழகத்தின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியில் கடல்சார் வணிகம் முக்கியப் பங்காற்றியுள்ளது. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்கள் சங்க கால மக்களின் வாழ்வியலை அழகாகவும் விரிவாகவும் காட்டுகின்றன. அவற்றுள் பத்துப்பாட்டு நூல்களான பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை மற்றும் மதுரைக்காஞ்சி ஆகியவை காவிரிப்பூம்பட்டினம், நீர்ப்பெயற்று, கொற்கை போன்ற துறைமுகங்களின் புவியியல் அமைப்பு, சுங்க நடைமுறைகள், கலங்கரை விளக்கங்கள்(வேயா மாடம்), ஏற்றுமதி-இறக்குமதிப் பொருட்கள் மற்றும் யவனர் உள்ளிட்ட அயல்நாட்டு வணிகர்களின் பங்களிப்பை முறைப்படுத்திப் பகுப்பாய்வு செய்வதை முதன்மை நோக்கமாகவும், சங்க காலத்தில், தமிழகத்தின் கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரைகளில் இயங்கிய துறைமுகங்களின் அமைப்பு மற்றும் அவற்றின் வளங்களை விரிவாக விளக்குவதாகவும் இக்கட்டுரை அமைகிறது.

ஆய்வின் நோக்கங்கள்

இவ்வாய்வு பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது:

* பத்துப்பாட்டு நூல்களில் இடம்பெறும் துறைமுகங்கள் குறித்த செய்திகளைத் தொகுத்து ஆராய்தல்.
* காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, சாலியூர், நீர்ப்பெயற்று போன்ற துறைமுகங்களின் வணிகச் சிறப்பை விளக்குதல்.
* சங்ககாலத் துறைமுகங்களின் கட்டமைப்பு, கப்பல் போக்குவரத்து, பண்டகசாலை மற்றும் கலங்கரை விளக்கம் போன்றவற்றை ஆராய்தல்.

முதன்மைச் சொற்கள்

துறைமுகங்கள்; கடல்வாணிகம்; சாலியூர்; நீர்ப்பெயற்று; யவனர்; வணிக அறம்

முன்னுரை

சங்க இலக்கியமாகிய பத்துப்பாட்டு நூல்களில், துறைமுகங்களின் வணிகச் சிறப்பும், சுங்க நடைமுறைகளும், கலங்கரை விளக்கங்களும், கடல் வழிப் போக்குவரத்தும் இருந்துள்ளமையையும் அறிய முடிகிறது.

பழந்தமிழர்களின் நாகரிகம், பண்பாடு, பொருளாதாரம் ஆகியாவற்றின் உச்சகட்ட அடையாளமாகத் திகழ்வது அவர்தம் கடல்சார் வணிகமும் துறைமுகக்கட்டமைப்பும் ஆகும்.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் தமிழகம் உலகின் பிற பெருநாடுகளோடு தரைவழி மற்றும் கடல்வழி வணிகத் தொடர்புகளைப் பேணி வந்துள்ளது. பண்டையத் தமிழகத்தின் பொருளாதார வலிமைக்கு அதன் இயற்கை எழிலார்ந்த கடற்கரைகளும், அவற்றில் நேர்த்தியாக அமைக்கப்பட்ட துறைமுகங்களுமே முதன்மைக்காரணங்களாகும். துறைமுகங்களின் கட்டமைப்பு, நங்கூரமிடும் தொழில் நுட்பம், சுங்க நடைமுறைகள், பரந்த பண்டசாலைகள் மற்றும் 'வேயா மாடம்' எனப்படும் கலங்கரை விளக்கங்கள் குறித்து இக்கட்டுரையில் ஆராயப் படுகிறது.

காவிரிபூம்பட்டினம் (பூம்புகார்)

பண்டையத் தமிழர்கள் கடலையும் நிலத்தையும் ஒருங்கே வென்று, பன்னாட்டு வணிகத்தில் புகழ்க்கொடி நாட்டியவர்கள் என்று தொல்காப்பியர் குறிப்பிட்ட 'முந்நீர் வழக்கம்' என்ற கடல்சார் பயண நெறிக்குச் சான்றாக, உருத்திரங்கண்ணனார் இயற்றிய பட்டினப் பாலையில் காணப்படும் 'சோழ நாட்டின் உலகளாவிய வணிக மையம் காவிரிபூம் பட்டினம்' என்ற வர்ணணை விளங்குகிறது.

காவிரி ஆறு கடலோடு கலக்கும் முகத்து வாரத்தில் அமைந்த பூம்புகார்த் துறைமுகம், சோழர்களின் முதன்மைப் பன்னாட்டுத் துறைமுகமாகத் திகழ்ந்தது.

மேகங்கள் கடலிலிருந்து முகந்த நீரினை மலையில் பொழிவதும், மலையில் பொழிந்த நீர் ஆறாகிக் கடலில் வந்து சேர்வதும் போல, பெரிய கப்பல்களில் இருந்து இறக்கப்பட்டு நிலத்தில் ஏற்றிவைக்கப்பட்ட பொருள்களும் நிலத்திலிருந்து ஏற்றுமதிக் காகக் கப்பல்களுக்கு அனுப்பப்படும் பொருள்களும் அளவு கடந்து துறைமுகப் பண்டகசாலையில் குவிந்து கிடந்தன என்பதை,

"வான் முகந்த நீர் மலைப் பொழியவும்
மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்
மார் பெய்யும் பருவம் போல
நீரினின்றும் நிலத்து ஏற்றவும்
நிலத்தினின்று நீர்பரப்பவும்"[1]

துறைமுகத்தில் நாவாய்கள் (கப்பல்கள்) கட்டப்பட்டிருக்கும் காட்சியை,

"வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி"[2]

உமணர்கள் (நெய்தல் நிலத்து மக்கள்) உப்பைக் கொடுத்து நெல்லைப் பெற்றுக் கொண்டு வந்த வலிமை வாய்ந்த படகுகளும், நாவாய்களும் கட்டுத்தறியில் வரிசையாகக் கட்டப்பட்டிருக்கும் குதிரைக ளைப் போலத் துறைமுக மரங்களில் கட்டப் பட்டிருந்தன.

பூம்புகார்த் துறைமுகத்தில் குவிந்திருந்த ஏற்றுமதி-இறக்குமதிப் பொருள்களை,

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலில் வந்த கருங்கறி மூடையும்,
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,
குடகுமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,
தென்கடல் முத்தும், குணக்கடல் துகிரும்,
கங்கை வாரியும், காவிரிப் பயனும்
ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்"[3]

புகார் நகரம், கடல் வாணிகத்திலும் தரை வாணிகத்திலும் சிறந்து விளங்கியதுடன் இனிய வாழ்வு வாழ்ந்தமையும் இதனால் புலப்படுகிறது.

ஒளிரும் கடற்கரைத் துறைமுகம்

இரவில் கடல்மீது செல்லும் நாவாய்களுக்கு வழிகாட்ட, வானத்தைத் தொடுவது போன்ற உயரமான கலங்கரை விளக்கம் அமைக்கப் பட்டிருந்தமை,

"வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்று அருஞ் சென்னி,
விண்பொர நிவந்த, வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் நெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்"[4]

பெரும்பாணாற்றுப்படையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார், ஓடும் கலங்களை (கப்பல்கள்) அழைக்கும் விதமாக வானத்தைத் தாங்கும் தூண் போல உயர்ந்த மாடத்தின் உச்சியில், இரவில் எரியவிடப்பட்ட விளக்கானது, திசை தெரியாமல் கடலில் தவிக்கும் நாவாய்களைக் கரைக்கு அழைத்தது என்ற செய்தி இடம் பெற்றுள்ளது.

கொற்கைத் துறைமுகம்

மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக்காஞ்சி, பாண்டிய நாட்டின் தென்கிழக்குக் கரையில் அமைந்த கொற்கைத் துறைமுகத்தின் சிறப்பை,

"விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்

இலங்கு வளை, இருஞ்சேரி,

கட் கொண்டிக் குடிப்பாக்கத்து

நற் கொற்கையோர் நசைப் பொருந!"[5]

கொற்கைத் துறைமுகம் உலகப் புகழ்பெற்ற முத்து உற்பத்திக்கு மையமாக விளங்கிய மையும், மேலும், பெருங்கடலில் பாய்களை விரித்துச் செல்லும் கப்பல்கள் துறைமுகத்தை அடையும் காட்சியை,

"கூம்பொடு மீப்பாய் களையாது மிசைபுரந்து

மேற்பால் பிறக்கும் நாவாய்...."[6]

புறநானூற்றுப் பாடல்களிலும் கடலில் செல்லும் கப்பல்கள் பாய்மரத்தையும், பாயை யும் சுருட்டாமல், காற்று வீசும் திசையில் மேல் பரந்து செல்லும் என்று கடல் வாணிகம் சிறந்து இருந்தமையை முதுகண்ணன் சாத்தனார் விளக்குகிறார்.

வணிக அறமும் – நடுநிலைமையும்

துறைமுகப்பட்டினங்களில் நடைபெற்ற வணிகத்தில் வணிகர்கள் பின்பற்றிய நேர்மையைச் சங்கப் புலவர்கள்,

"கொள்வதூஉம் மிகைகொளாது,
கொடுப்பதூஉம் - குறைகொடாது,

பல்பண்டம் பகர்ந்து வீசும்"[7]

பொருள்களைக் கொள்முதல் செய்யும்போது அதிகமாக வாங்காமலும், விற்பனை செய்யும்போது குறைவாகக் கொடுக்காமலும் நடுநிலைமையோடு வணிகம் செய்துள்ளமை தெரிகிறது.

"அளந்து அறியாப் பல பண்டம்

வரம்பு அறியாமை வந்து ஈண்டி,

அருங் கடிப் பெருங்காப்பின்,

வலியுடைய வல் அணங்கின் நோன்

புலி பொறித்து புறம் போக்கி"[8]

மரக்கலங்களில் ஏற்றப்படும் பொருட்களுக் கும், இறக்குமதி செய்யும் பொருட்களுக்கும் சரியான முறையில் விலை நிர்ணயம் செய்தும், புலி முத்திரை பொறிக்கப்பட்ட பின்னரே விற்பனைக்கும் அனுப்பப்பட்டது. சுங்கச் சாலையில் காவல் புரிபவர், கால ஒழுங்கும், கடுமையும் உடையவர் என்பதை கதிரவன் தேரில் பூட்டிய குதிரையினை உவமையாகக் கூறி இருக்கிறார் பட்டினப் பாலை ஆசிரியர்.

கடல் வளம் - சாலியூர்

சாலியூர், கடலை அரணாகக் கொண்ட மற்றும் கொற்கைத் துறைமுகத்திற்கு இணையான ஓர் பழம்பெரும் கடற்கரைத் துறைமுகமாகும்

"ஆடு இயற் பெரு நாவாய்,

மழை முற்றிய மலை புரையத்

துறைமுற்றிய துளங்கு இருக்கை

தென்கடல் குண்டு அகழி,

சீர் சான்ற உயர் நெல்லின்" [9]

சாலியூர் கடற்கரைத் துறைமுகத்தின் அலை களில் அசைந்து ஆடுகின்ற பெரிய கப்பல்கள் (நாவாய்) மேகங்கள் சூழ்ந்திருக் கும் பெரிய மலையைப் போன்று தோற்றம் அளித்தன. அத்தகைய, பிரமாண்டமான கப்பல்கள் துறைமுகத்திற்கு வந்து தங்கி அசைந்தன என்றும், தெளிந்த நீரை உடைய கடல், அந்த ஊருக்கு ஒரு ஆழமான அகழியைப் போல பாதுகாப்பாக அமைந்து உள்ளது. நிறைந்த நீர் வளமும், மிக உயர்ந்த தரத்தை கொண்ட நெல் வகைகள் மிகுதியாக விளைந்தன என்றும் அழகாக விளக்குகிறார் ஆசிரியர்.

யவனர்களுடன் வாணிபத் தொடர்பு

அரண்மனையின் அந்தப்புர இரவு நிலையைப் போக்க யவனர்களது கைவினைத் திறத்தால் மிக நுட்பமாகச் செய்யப்பட்ட பெண்பாவை வடிவச் சிற்பம் ஒன்று அங்கு உள்ளது. அப்பாவையின் இருகரங்களும் ஏந்திப் பிடித்துள்ள அழகிய அகல்விளக்கில் நெய்யை நிறைய வார்த்து தடித்த திரியை விட்டு தீபத்தை ஏற்றி வைத்துள்ளனர் என்பதை,

"எவனர் இயற்றிய வினை மாண் பாவை

கை ஏந்து ஐ அகல் நிறைய நெய்
சொரிந்து"[10]

சங்ககாலத்தில் யவனர்கள் வெறும் வணிகர் களாக மட்டுமின்றி, சிற்பிகளாவும், கைவினைஞர்களாகவும், அரசின் நம்பிக்கைக்குரிய மெய்க் காவலர்களாகவும் தமிழகத்தில் வாழ்ந்துள்ளனர் என்பதை நூல்கள் வழி அறிய முடிகிறது.

வேறுபட்ட மொழிகளைப் பேசும் யவனர்கள் உள்ளிட்ட அயல்நாட்டு வணிகர்கள் புகார்ப் பட்டினத்து மக்களுடன் கலந்து மகிழ்வோடு வாழ்ந்த செய்தியை,

'வேறு வேறு உயர்ந்த முதுவாய் ஓக்கல்

சாறு அயர் மூதூர் சென்று தொக்காங்கு'[11]

பாடல் வரிகளில் ஆசிரியர் கடியலூர் உத்திரங் கண்ணனார் விளக்குகிறார்.

வணிகத் தொடர்பைத் தாண்டி தமிழ் மன்னர்களின் பாசறையில் மெய் காப்பாளர் களாகவும் பணியாற்றிய செய்தியை,

"மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து, வலிபுணர் யாக்கை, வன்கண் யவனர்" [12]

மன்னனின் இருப்பிடத்தைப் பாதுகாக்கும் மெய் காப்பாளர்களாக யவனர்கள், வீரம் மற்றும் கம்பீரத்துடன் திகழ்ந்தனர் என்பதை நப்பூதனார் விவரிக்கிறார்.

முடிவுரை

உலகையே வியப்பில் ஆழ்த்திய வரலாற்று உண்மை என்பதற்கும், வெறும் கற்பனை யல்ல என்பதற்கும் சான்றாகப் "பத்துப் பாட்டில் கூறப்படும் துறைமுகங்கள்" வாயிலாகத் தமிழர்களின் கடல்சார் வணிகமும், துறைமுகக் கட்டமைப்பும், காவிரிப்பூம்பட்டினத்தின், பிரம்மாண்டமான சுங்கச்சாவடிகளும், இரவு நேரக்கப்பல்களும், கப்பல்களுக்கு வழிகாட்டிய ஒளிரும் கலங்கரை விளக்கங்களும், கொற்கைத் துறையின் முத்துக்குளிப்பும், சாலியூர் போன்ற கடற்கரைப் பட்டினங்களின் செழிப்பும் பழந் தமிழர்களின் இணையற்ற கடலாதிக்கத்தைப் பறைசாற்றுகின்றன.

இப்பாரம்பரியத்தின் தலைசிறந்த பண்பாடாக விளங்கியது, வணிகத்தில் அவர்கள் பேணிய அறமும், நடுநிலைமையும் ஆகும். "நடுவு நின்ற நன்நெஞ்சினோர்" என பட்டினப்பாலை போற்றுவது போல, கொள்வதும் மிக கொள்ளாதூஉம், கொடுப்பதூஉம் குறையாது நேர்மையுடன் வணிகம் செய்தனர். இத்தகைய அறநெறியும் கட்டமைப்புமே யவனர்கள் (கிரேக்க, ரோமானியர்கள்) உள்ள உலக நாடுகளின் நவாய்களைத் தமிழகத் துறைமுகங்களை நோக்கி ஈர்த்தன. பழந் தமிழர்கள் கடலைத் தடங்கலாக கருதாமல் அதைத் தங்கள் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் சிறப்பாக மாற்றிக்கொண்டனர்.

ஆய்வின் முக்கியப் பெறுபேறுகள்

* இவ்வாய்வின் வழியாகப் பின்வரும் கருத்துகள் வெளிப்படுகின்றன:
* பத்துப்பாட்டு நூல்கள் சங்ககாலத் தமிழகத்தின் துறைமுக அமைப்பைப் பற்றிய முக்கியமான இலக்கியத் தரவு களை வழங்குகின்றன.
* காவிரிப்பூம்பட்டினம் பன்னாட்டு வணிகச் செயல்பாடுகள் நடைபெற்ற முக்கியத் துறைமுகமாக விளங்கியமை புலப் படுகிறது.
* கொற்கை முத்து வளத்துடன் தொடர்பு டைய முக்கியக் கடல்சார் வணிக மையமாகத் திகழ்ந்துள்ளது.
* கலங்கரை விளக்கம், கப்பல் போக்கு வரத்து, பண்டகசாலை, சுங்க நடைமுறை போன்ற துறைமுகக் கட்டமைப்புக் கூறுகள் இருந்தமை இலக்கியச் சான்று களால் அறியப்படுகிறது.
* பல்வேறு நாடுகள் மற்றும் நிலப்பகுதிக ளிலிருந்து பொருட்கள் தமிழகத் துறை முகங்களுக்கு வந்துள்ளன.
* யவனர்கள் வணிகத்துடன் மட்டுமின்றி கைவினை மற்றும் பாதுகாப்புப் பணிகளிலும் ஈடுபட்டிருந்ததாக இலக்கியச் செய்திகள் காட்டுகின்றன.
* துறைமுகங்கள் பொருளாதாரப் பரிமாற்ற மையங்களாக மட்டுமின்றி பண்பாட்டுப் பரிமாற்ற மையங்களாகவும் செயல் பட்டுள்ளன.
* வணிகத்தில் நேர்மை, அளவு, நடு நிலைமை போன்ற அறநெறிகளும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

சான்றென் விளக்கம்

1. பட்டினப்பாலை, பாடல் வரிகள் – 126-130
2. மேலது, பாடல் வரிகள் – 29 – 30
3. மேலுது, பாடல் வரிகள் – 186 -191
4. பெரும்பாணாற்றுப்படை, பாடல் வரிகள் – 346-350
5. மதுரைக்காஞ்சி, பாடல் வரிகள் – 135 – 138
6. புறநானுறு, பாடல் – 36, பாடல் வரிகள் – 11-12
7. பட்டினப்பாலை, பாடல் வரிகள் – 210 – 211
8. மேலது, பாடல் வரிகள் – 131-135
9. மதுரைக்காஞ்சி, பாடல் வரிகள் – 83-87
10. நெடுநல்வாடை, பாடல் வரிகள் – 101-102
11. பட்டினப்பாலை, பாடல் வரிகள் – 214-215
12. முல்லைப்பாட்டு, பாடல் வரிகள் – 60-61

துணைநூற்பட்டியல்

- பத்துப்பாட்டு (மூலமும் உரையும்) 2 தொகுதி, நியூசெஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098
- உ.வே. சாமிநாதையர், பத்துப்பாட்டு: மூலமும் உரையும், உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.
- நச்சினார்க்கினியர், பத்துப்பாட்டு – உரை, உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.